மாநிலத்தில்தான் சர்க்கரை விநியோகம் நல்லமுறையில் மத்திய சர்க்காருக்கே வழிகாட்டியாக இருந்து வருகிறது. ஆகவே, இதை ஒரு பெரிய வரி இனமாகக் கருதாது திருத்தத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு வாரியாக எடுத்துக் கொள்கிறபோது அதை எடுத்துக் கொள்கிறேன். இப்பொழுது அவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/68) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. மெய்யப்பன் அவர்களுடைய திருத்தத்தை அவர் வற்புறுத்தவில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்படுகிறது. திரு. க. இராமமூர்த்தி அவர்கள் அவையில் இல்லாததால் அவருடைய திருத்தம் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பிரிவு 2 அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மசோதா நிறை வேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ix) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனங்கள் (துணை) திருத்த மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1968-ம் ஆண்டு இனங்கள் (துணை) திருத்த மசோதாவை இப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் நம் இசைவைத் தெரிவித் திருக்கிறார்கள்.